**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.272/15**

2024-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திரு.பரந்தாமன், என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திருமதி.பெ.சீதாதேவி, மூன்றாம் நிலை மேசை எழுத்தர், என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திரு.பரந்தாமன், |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - த/பெ.பக்தவச்சலம் |
| கிராமம் | - கூழமந்தல் |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

01.04.2024
பி.சா.1.
**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்து ஆதியில் நடேசன் செட்டி மேஸ்திரி என்பவருக்கு சொந்தமான சொத்து என்றால் இல்லை. துரைசாமி என்பவருக்கு அனுபவத்தின்பேரில் பட்டா வழங்கப்பட்டதன்பேரில் உரிமையான சொத்து. நடேசன் செட்டிக்கு கூழமந்தல் கிராமம்தான் பூர்வீகம் என்றால் நடேசன் செட்டி பற்றி எனக்கு தெரியாது. அவருக்கு இரண்டு மனைவிகள் என்று கேள்விபட்டுள்ளேன். முதல் மனைவி பெயர் பொட்டியம்மாள், 2வது மனைவியின் பெயர் லட்சுமியம்மாள் என்கிற வள்ளியம்மாள். லட்சுமியம்மாள் என்கிற வள்ளியம்மாள் மட்டும்தான் தாவா சொத்துள்ள கூழமந்தல் கிராமத்தில் வசிசத்து வந்தார். அவரோடு நடேசன் செட்டி கூழமந்தல் கிராமத்தில் வசித்து வந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியவில்லை.

நடேசன் செட்டி குடும்பத்தார் வெளியூரிலிருந்து கூழமந்தல் கிராமத்திற்கு வந்து குடிபெயர்ந்தவர்கள் இல்லை என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. முதல் மனைவி உயிருடன் இருந்தபோது 2வது திருமணம் செய்துக்கொண்டாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் சிதிலமடைந்த வீடு தற்போதும் உள்ளது என்று சொன்னால் தற்போது இல்லை. ஏற்கனவே சிதிலமடைந்த ஓட்டுவீடு இருந்தது. அந்த வீட்டில்தான் லட்சுமியம்மாள் அவரது மகன்களோடு வசித்து வந்தார் என்று சொன்னால் இல்லை. லட்சுமியம்மாள்தான் வசித்து வந்தார். அவரது மகன்கள் நாகன் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்கள் வந்து செல்வார்கள்.

2) முதல் மனைவிக்கு பிறந்தவர்கள் தான் ஊமை, பெருமாள் மற்றும் கண்ணன் என்று கேள்விபட்டுள்ளேன். 2வது மனைவிக்கு பிறந்தவர்கள் துரைசாமி, நாகன், கிருஷ்ணன் ஆகியோர்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியும். கிருஷ்ணன் நாகன் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்படுவதற்கு முன்பு துரைசாமி பெயரில் பட்டா இருந்தது என்ற விவரம் தெரிந்துக்கொண்டேன். எனக்கு எழுத படிக்க தெரியும். வா.சா.ஆ.1 ஆவணமான பட்டா லட்சுமியம்மாள் நடேசன் செட்டி மக்கள் பெருமாள், ஊமை மற்றும் கண்ணன் ஆகியோர்கள் பெயரில் உள்ள கூட்டு பட்டா. வா.சா.ஆ.2 ஆவணத்திலும் வள்ளியம்மாள், ஊமை, பெருமாள் கண்ணன் ஆகியோர்கள் பெயரில் அனுப்பப்பட்டுள்ள அறிவிப்பு இந்த ஆவணங்கள் யூ.டி.ஆர் திட்டத்தின்கீழ் வழங்க்ப்பட்ட ஆவணம்தான். யூ.டி.ஆர் வழங்கப்பட்ட காலகட்டத்தில் யார் யார் சொத்துக்களை அனுபவித்து வந்தார்களோ அவர்கள் பெயரில் பட்டா வழங்கப்பட்டது. வள்ளியம்மாள், பெருமாள், ஊமை, கண்ணன் ஆகியோர்கள் தாவா சொத்தை அனுபவித்து வந்த காரணத்தால்தான் அவர்கள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தவறு. நடேசன் செட்டியின் வாரிசுகள் பிழைப்பிற்காக வெளியூறுக்கு சென்றுவிட்டார்கள் என்றால் முதல் மனைவியின் வாரிசுகள் குறித்து எனக்கு தெரியாது. 2வது மனைவியின் வாரிசுகள்தான் பிழைப்பிற்காக வெளியூர் சென்ற விவரம் எனக்கு தெரியும். 2வது மனைவியின்

மகன் துரைசாமி இறந்தது குறித்து எனக்கு தெரியாது 1969ம் வருடம் இறந்ததாக கேள்விப்பட்டேன்.

3) அவரது இறப்பு சான்றிதழையும் வாங்கி வைத்துள்ளேன். நான் முதல் மனைவியின் வாரிசுகள் குறித்து தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றும், நான் கிரையம் பெற்றதை நிருபிக்கவேண்டி பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை தவிர நடேசன்செட்டிக்கும், அவரது வாரிசுக்கும் வேறு சொத்துக்கள் இல்லை. பி.சா.ஆ.1. சான்றாவணம் துரைசாமி என்பவர் பெயரில் 4 செண்டிற்கு வழங்கப்பட்டுள்ள பட்டா என்றால் சரிதான். மேற்படி பி.வா.ஆ.1 ஆவணத்தில் ஐக்குபந்தியாக வீதிக்கு வடக்கிலும், பூவன் வீட்டிற்கு கிழக்கிலும், பாட்டைக்கு தெற்கிலும், கோபால் வீட்டிற்கு மேற்கிலும் 4 செண்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் சர்வே எண்.146/1 முழு விஸ்தீரனம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐக்குபந்திப்படிதான் யார் யார் சொத்து என அடையாளம் காணப்படவேண்டும். துரைசாமி எப்படி இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

4) லட்சுமியம்மாள் சுமார் 20 வருடத்திற்கு முன்பு காலமாகிவிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியும். அதன் பின்னிட்டு அவரது காலத்திற்கு பிறகு தாவா சொத்துக்களை யார் அனுபவித்து வந்தார்கள் என்பது எனக்கு தெரியும். முதல் மனைவியின் மகன் ஊமை எந்த வருடம் இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. முதல் மனைவியின் வாரிசுகள் குறித்த எந்த விவரமும் எனக்கு தெரியாது. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் ஊமை இறந்த விவரம் ஊருக்கே தெரியும் என்று சொன்னால் சரியல்ல. லட்சுமியம்மாள் இறப்பிற்கு முதல் மனைவியின் வாரிசுகள் யார் யார் வந்தார்கள் என்றால் நான் பார்க்கவில்லை. ஊமை, பெருமாள் ஆகியோர்கள் உயிருடன் இருந்த காலத்திலேயே வாரிசுகள் வாய்மொழியாக கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. ஊமையின் 2 செண்ட் பாகத்தை

அவரது மனைவி வாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்று சொன்னால் நாங்கள் கிரையம் பெற்றபிறகு அந்த ஆவணத்தை உருவாக்கி கொண்டார்கள். எங்கள் ஊரில் சேகர், சோமசுந்தரம் ஆகியோர்கள் உள்ளார்கள். என் பக்கத்து வீடுதான்.

5) நான் தான செட்டில்மெண்ட் ஆவணத்தை வாங்கி பார்த்துள்ளேன் அதில் அவர்கள்தான் சாட்சி கையொப்பம் இட்டுள்ளார்கள். தாவா சொத்தை வாதிதான் ஆண்டு அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் இல்லை நாங்கள்தான் அனுபவித்து வருகிறோம். பி.வா.ஆ.2 ஆவணத்தின்படி நாங்கள் கிரையம் பெற்றது வள்ளியம்மாளின் வாரிசு நாகன் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்களிடமிருந்து கிரையம் பெற்றுள்ளோம். எங்கள் கிரைய ஆவணத்தில் துரைசாமி பெயரில் பட்டாவாய் இருந்து என்று குறிப்பிட்டுள்ளோம். நாங்கள் கிரையம் பெருவதற்கு முன்பு தாவா சொத்துக்கள் துரைசாமியின் தம்பிகள் பெயரில் பட்டா இருந்தது. நாகன் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்கள் துரைசாமியின் வாரிசுகள் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாரிசு சான்றிதழ் அவர்கள் கொடுத்ததை தாக்கல் செய்துள்ளோம். நான் சொல்வதுபோல் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் ஜக்குபந்தி குறிப்பிட்டுதான் கிரையம் பெற்றுள்ளோம்.

6) பி.வா.ஆ.2 ஜக்குபந்தியாக பஜனை கோயில் தெருவிற்கு வடக்கு, வீதிக்கு தெற்கு, கோபால் வீட்டிற்கு மேற்கு, வழிபாட்டைக்கு கிழக்கு என குறிப்பிட்டுதான் கிரையம் பெற்றுள்ளேன். பி.வா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ளபடி பூவன் வீட்டிற்கு கிழக்கு என பி.வா.ஆ.2 ஜக்குபந்தி குறிப்பிடவில்லை என்று சொன்னால் பாட்டைக்கு கிழக்கில்தான் மனை உள்ளது. நாங்கள் தாக்கல் செய்துள்ள பி.வா.ஆ.3 பட்டா பெயர் மாற்றம் துரைசாமி பெயரில் இருந்து பட்டா மாற்றம் செய்துள்ளதற்கான சங்கதிகள் எதுவும் குறிப்பிடவில்லை என்று சொன்னால்

பட்டா பெயர் மாற்றம் குறித்து நாகன் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்கள் மனு கொடுத்துதான் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பி.வா.ஆ.3 ஆவணம் எனது தகப்பனார் மோசடியாக உருவாக்கியுள்ள ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வருவாய் துறை ஆவணத்தை நாங்கள் மோசடியாக உருவாக்க முடியாது.

7) பி.வா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பினை வாதி சுரேஷ் என்பவர் மோசடியாக அபகரித்துவிட்டதாகவும் எங்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பிற்கு ஈடுசெய்யவேண்டும் என்றுதனர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளோம். அந்த வழக்கறிஞர் அறிவிப்பினை சொத்து விவரத்தில் ஐக்குபந்தி குறித்தும் புதிய சர்வே எண் குறித்தும் எனது தகப்பனார் வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பியுள்ளார் என்றால் ஐக்குபந்தி குறிப்பிடவில்லை. மோசடியாக ஆவணம் ஏற்படுத்தியுள்ளதால்தான் ஐக்குபந்தி குறித்து நாங்கள் வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிடவில்லை. பி.வா.ஆ.3 ஆவணத்தில் இணைத்துள்ள பட்டாவிலும், அடங்களிலும் துரைசாமி பெயர் குறிப்பிடவில்லை. உண்மையில் துரைசாமி பெயரில் தொடர்ச்சியாக ஆவணங்கள் இருந்திருந்தால் அவர் பெயரும் அவருக்கு பின்னிட்டு அவருடைய வாரிசுகள் பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை கிரையம் பெறுவதற்காக வேண்டிதான் சம்மந்தமே இல்லாத நபர்கள் பெயரில் நானும் எனது தகப்பனாரும் எங்கள் செல்வாக்கை பயன்படுத்தி பட்டா பெற்றுள்ளோம் என்று சொன்னால் அது தவறு.

8) 2015ம் வருடம் என் தகப்பனார் பெயரில் வாதி காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தார். அதன் பிறகு வாதி சுரேஷ் என்பவர் யார் என்று தெரிந்துகொண்டோம். சுரேஷ் என்பவர் நடேசன்செட்டியின் பேரன் என்ற விவரத்தை நாங்கள் தெரிந்துக்கொண்டோமா என்றால் அவராகவே வந்து நடேசசெட்டியின் வாரிசு என்று குறிப்பிட்டார். வாதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று நான்

பார்க்கவில்லை. காவல் நிலையத்தில் வாதி புகார் அளித்தபோது நான் காவல்துறையில் பணிபுரிவதால் அதை பயன்படுத்தி விசாரணை மேற்கொள்ளாமல் தடுத்துவிட்டேன் என்று சொன்னால் அது தவறு. விசாரித்து நீதிமன்றத்தில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காவல் நிலையத்தில் கூறிவிட்டார்கள். வாதி சுமார் 4, 5 முறை என் தகப்பனார்மீது காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

9) மேற்படி புகாரின்பேரில் விசாரணை மேற்கொண்டு உரிமையியல் பிரச்சனை என்ற காரணத்தினால் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமாறு கூறிவிட்டார்கள். இதன் அடிப்படையில்தான் வாதி இந்நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். அதேபோல் என் தகப்பனாரும் இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் மேற்கொண்டு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.